## மக்காச்சோளம்

சோளத்தின் அடிச்சாம்பல் நோய் : பெரனோஸ்கிரிரோஸ் போரா சொர்கி.

1. இந்நோய் குஜராத், மஹாராஷ்டிரா,ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய இடங்களில் பரவியுள்ளது.
2. அறிகுறிகள் : இந்நோயினால் பாதிக்கப்பட்ட செடி வெளிர் நிறத்திலும், வளர்ச்சி குறைந்தும், இலையின் மேல் வெள்ளை - வரிக்கோடுகள் கொண்டும், குறைந்து விதை அமைப்பு கொண்டும் காணப்படும்.
3. எதிர்ப்புசக்தி கொண்ட செடி மட்டும் நோய்க்கான அறிகுறிகளை தோற்றுவிக்கின்றன. ஆனால் செடியின் மகசூலில் பாதிப்பு ஏற்படுத்தவதில்லை.

கட்டுப்பாடு

1. அசைல்அலனின் பூசணக்கொல்லியான மெட்டாலக்சில் 6 கிராம் கிலோ என்ற அளவில் விதை நேர்த்தி செய்யவும்.
2. இந்நோயினால் பாதிக்கப்பட்ட செடிகளை அறிகுறிகள் தெரிந்தவுடன் பிடுங்கி எறியவும்.

3. விதைகளை ஆப்ரான் 35 டபிள்யூ பி 2.5 கிராம் / கிலோ என்ற அளவில் நேர்த்தி செய்யலாம்.
4. நோய் எதிர்ப்பு இரகங்கள் _ கோ எச்(எம்) 5, இன்டிமிட், 345, இஹெச், 43861, கேஹெச்-526, ஏஹச் - 36.
5. மெட்டாலக்சில் 1 கிராம் / லிட்டர் மெட்டாலக்சில் + மேங்கோசெப் 2.5 கிராம் / லிட்டர் என்ற அளவில் தெளிக்கலாம்.

பிரௌன் வரிக்கோடுகளைக் கொண்ட அடிச்சாம்பல் நோய் : ஸ்கிளிரோப்தோரா ரேசியே

இரகம் : சியே

அடியில் உள்ள இலையில் இலைக்கருகல் ஆரம்பித்து. இலைகள் வெளிர்நிறமாக மாறி வரிக்கோடுகளை கொண்டு மாறி இருக்கும்.

1. பின்னர் இந்த வரிக்ககோடுகள் சிவப்பு நிறத்திலிருந்து பழுப்பு நிறமாக மாறுகின்றன. பின்னர் தோன்றும் கருகல் அறிகுறி வரிகளாகவும், திட்டுதிட்டாகவும் மாறுகின்றன.
2. செடி பூப்பதற்கு முன் பாதிக்கப்பட்டால் இறந்துவிடக்கூட வாய்ப்பு உண்டு மற்றும் விதைகள் உற்பத்தியாவது குறைகிறது.

3. வெள்ளைப் பூசண வித்துக்கள் இலையின் இரண்டு பாகத்திலும் தோன்றுகின்றன.
4. இதில் பூக்கும் பாகமும், காய்க்கும் பாகமும் மாறுவதில்லை மற்றும் இலைகள் உதிர்கின்றன.

கட்டுப்பாடு

அசைல்அலனின் பூசணக் கொல்லியான, மெட்டாலிக்சில் (6 கிராம்) மற்றும் இலைகள் உதிர்வதில்லை.

நோய் எதிர்ப்புத் தன்மையுள்ள இரகங்கள். பிரபாத், கோஹினூர், ஐசிஐ-703, பிஎசி – 9401, பிஎம்இசட்- 2, சீபெக் - 2331.

சார்கோல் தண்டு முதல் நோய் - மேக்ரோபோமினா பேசியோலினா

அறிகுறிகள்

இந்நோயை ஜம்மு மற்றும் காஷ்மீர், மேற்கு வங்காளம், ஹரியானா, இராஜஸ்தான், டெல்லி, உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம், ஆந்திரபிரதேசம், கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டில் பரவுயுள்ளது.

அறிகுறிகள்

செடி பூத்து 1-2 வாரங்கள் கழித்து இந்நோய் தோன்றுகிறது. வெளி இடைக்கணுவின் கீழ்பகுதி வெளில் மஞ்சள் நிறமாக மாறுகிறது.

இடைக்கணுவின் முளைக்கும் பகுதி மிகவும் மோசமாக அழுகி இருக்கும்.

நோய்க்கான காரணி நாற்றாங்கால் பயிரின் வேரினுள் நுழைந்து விடுகிறது. செடி அடையும் போது தண்டின் உள்பகுதி கருப்பு நிறமாக மாறியும் உதிர்ந்தும் காணப்படுகிறது.

1. இவ்வகையான அறிகுறிகள் தண்டின் கீழ்ப்பகுதியில் காணப்படுகிறது. பாதிக்கப்பட்ட இடத்தை உற்று பார்த்தால் அதில் சிறிய கருப்பு நிறமுடைய நோய்க்கான காரணியை தோற்றுவிக்கும் ஸ்கிளிரோஷியா காணப்படுகிறது.
2. இந்நோய்க்கான காரணி தானியத்தின் மேல்பகுதியை பாதித்து அதை கருப்பாக்குகிறது.
3. மண்ணின் வெப்பநிலை அதிகமாக இருந்தால் மற்றும் குறைவான ஈரப்பதம்

கட்டுப்பாடு

பூக்கும் நேரத்தில் குறைவான தண்ணீர் கிடைப்பதால் இந்நோய் ஏற்படுகிறது. எனவே அதை தவிர்க்கவும்.

டிரைக்கோடெர்மா விரிடியை தொழு உரத்துடன் 2.5 கிலோ / எக்டர் என்ற அளவில் பொடலாம். (பத்து நாட்களுக்கு முன் கலந்து வைத்து பின்னர் போடலாம்).

டர்கிசம் இலைக்கருகல் நோய் : எக்ஸிரோஹிலம் டர்சிகம்

இந்நோய் ஜம்மு மற்றும் காஷ்மீர், ஹிமாச்சலப்பிரதேசம், மேற்கு வங்காளம், சிக்கிம், மேகாலாயா, திரிபுரா, அஸ்ஸாம், உத்திரப்பிரதேசம், உத்திராஞ்சல், பீகார், மத்தியப் பிரதேசம், குஜராத், கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய இடங்களில் பரவியுள்ளது.

அறிகுறிகள்

1. இந்நோயினால் பாதிக்கப்பட்ட செடி மிக சிறிறய பொருளாதார சேதாரத்தை ஏற்படுத்தகிறது. இந்நோயின் முந்திய நிலையில் சிறிது நீள் வட்டவடிவ தண்ணீரில், மூழ்கியுள்ள அளவு சிறிய புள்ளிகள் உருவாகும். இவ்வகையான புள்ளிகள் பெரியதாகவும், நீளவடிவமுள்ள புள்ளிகளாகவும், இறந்த செல்களைக் கொண்டும் உள்ளன.

2. இவ்வகையான அறிகுறிகள் முதலில் கீழ்ப்பகுதியிலுள்ள இலைகளிலும் தோன்றி, அவை அளவிலும், எண்ணிக்கையிலும் அதிகரிக்கின்றன. இவ்வகையான அறிகுறிகள் செடிகள் காளும் வரை தோன்றுகின்றன.
3. இவ்வகையான புள்ளிகள் பெரியதாகவும், வெளிர்பச்சை, நிறத்திலும் இருக்கும்.

கட்டுப்பாடு

நோய் எதிர்ப்புத்திறன் கொண்ட இரகங்களான, சால்டாஸ், டெக்கான் 105, ட்ரிசுலேட்டா, டெக்கான் 109, பயிரிடலாம். மேங்கோசெம் 2 கிராம் / லிட்டர் என்ற அளவில் தெளிக்கலாம்.

மேய்டிஸ் கருகல் : பைபோலாரிஸ் மேடிஸ்

அறிகுறிகள்

1. இளம் புள்ளிகள் சிறியதாகவும், வைரத்தைப் போன்ற வடிவுடையதாக இருக்கும்.
2. இவை பெரியதாகும் போது, நீளமாகவும் இருக்கும். இவ்வகையான இலைப்புள்ளிகள் ஒன்று சேர்ந்து, இலையில் எரிந்துபோன தோற்றத்தை ஏற்படுத்துகின்றன.

3. இவ்வகையான புள்ளிகள் வீரிய இரகத்திற்கும், மற்ற இரகத்திற்கும் மாறுபடுகின்றன.

கட்டுப்பாடு

1. மேங்கோசெப் 2 கிராம் / லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும்.
2. நோய் எதிர்ப்புக் கொண்ட இரகங்களான டெக்கான், விஎல்42, பிரபாத், கேஹச்.5901ஈ பிஆர்ஓ-324, 339, ஐசிஐ - 701, எஃப் - 701, எஃப் - 7012, சார்டஜ், டெக்கான் 109 பயிரிடலாம்.
3. சர்வுலேரியா இலைப்புள்ளி நோய் - கர்வுலேரியா பல்லஸ்சென்ஸ்

கர்வுலேரியா லுனேடா

இந்நோய் டெல்லி, பஞ்சாப், ஹிமாச்சலபிரதேசம், உத்திரப்பிரதேசம், ஆந்திர்பிரதேசத்தில் பரவியுள்ளது.

அறிகுறிகள்

1. இந்நோய் முதலில் சிறிய வடிவ புள்ளிகளாக தோன்றி பின்னர் பெரியதாக தோன்றுகிறது.

2. இதில் இலைக்கருகல் வட்ட வடிவ நீள்வட்ட வடிமாகவும், தனித்தனியாகவும் அல்லது சேர்ந்தும் காணப்படுகிறது.
3. இலைக்கருகலின் மத்தியப் புள்ளி வெளிர் நிறத்திலிருந்து இளம் பழுப்பு நிறமாகவும், இதனை சுற்றி அடர்பகுப்பு வரிகளால் சூழப்படுகிறது.

கட்டுப்பாடு

1. திரம் அல்லது கேப்டான் 2 கிராம் / கிலோ என்ற அளவில் விதைநேர்த்தி செய்யலாம்.
2. இரண்டு முளை கேப்டால் 2 கிராம் / லிட்டர் என்ற அளவில் தெளிக்கலாம்.

பழுப்புநிறப்புள்ளி நோய் - பைசோடெர்மா மேய்டிஸ்

1. இந்நோய் ஜம்மு மற்றும் காஷ்மீர், சிக்கிம், மேற்குவங்காளம், பஞ்சாப், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், கர்நாடகா ஆகிய இடங்களில் பரவியுள்ளது. அதிக வெப்பநிலையில் இந்நோய் பரவுகிறது.
2. முதலில் இலையின் விளிம்புகளில் இந்நோய்க்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. பின்னர் சிறிய வெளிர்நிறப் புள்ளிகளாகவும், மற்றும் நோயுள்ள மற்றும் நோயற்ற திசுவின் வரிக்கோடுகள் கொண்டும் காணப்படுகின்றன.

3. இலையில்  மத்திய நரம்பின் பகுதி வட்டவடிவமாகவும் அடர் பழுப்பு நிறத்திலும், மற்ற இடத்தில் வெளிர் நிறமுடைய புள்ளிகளை கொண்டிருக்கும். கணுவும், இடைக்கணுவும் பழுப்பு நிறத்தில் இருக்கும்.
4. மிகவும் தீவிர நோய்த்தாக்கம் உள்ள பகுதிகளில், தண்டுப் பகுதியும் சேர்த்து அழுகிவிடும் வாய்ப்புண்டு.

கட்டுப்பயிர்

1. சற்று முன்பருவத்தில் பயிரிட்டால் இந்நொய் தாக்குவதிலிருந்து தப்பிக்கலாம்.
2. வயரைச் சுற்றிலும் கரும்பு வகையைச் சார்ந்த பயிரை பயிர் செய்வதைத் தவிர்க்கவும்.
3. அசைல் அலனின் பூஞ்சாணக் கொல்லியான மெட்டாலகஸில் பயன்படுத்தலாம்.
4. பித்தியம் தண்டழுகல் - பித்தியம் அபெனிடெர்மேட்டம்

இந்நோய், சிக்கிம், ஹிமாச்சலப்பிரதேசம், மேற்கு வங்காளம், பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான், டெல்லி, உத்திரப்பிரதேசம், பீகாகர் ஆகிய இடங்களில் பரவியுள்ளது.

அறிகுறிகள்

1. இந்நோயினால் பாதிக்கப்பட்ட செடியின் அடி இடைக்கணு மிகவும் மென்மையாகவும். அடர் பழுப்பு நிறத்திலும் தண்ணீரில் மூழ்கினமாதிரி புள்ளிகள் தோன்றி, செடியை வளரவிடாமல் செய்கிறது.
2. சேதப்படுத்தப்பட்ட இடைக்கணு திருகிய தோற்றத்துடனும், செடியின் எல்லாவிதமான தண்டின் உள்பகுதி சேதம் ஆகும் வரை செடி உயிருடனும் இருக்கும்.
3. இதனை ஊடகத்தில் பிரிக்கும் போது பித்தியத்தையும், எர்வீனியா வித்தியாசப்படுத்துவது அவசியம்.

கட்டுப்பாடு

1. வடஇந்தியாவில் ஜ¤லை 10 முதல் 20க்குள் நடவு மேற்கொள்ளவேண்டும்.
2. ஒரு எக்டருக்கு செடியின் எண்ணிக்கை 50,000 இருக்குமாறும் காத்தல்வேண்டும்.
3. வயலில் தண்ணீர் நன்கு வடியுமாறு காத்தல்வேண்டும்.
4. முந்திய பயிரின் கழிவுகளை அகற்றவேண்டும்.
5. கேப்டான் என்ற மருந்தை 1 கிராம் / 100 லிட்டர் என்ற அளவில் அடிக்கணுவில் மண்ணில் தெளிக்கவேண்டும்.

6. நோய் எதிர்ப்புத்திறன் கொண்ட இரகங்களான - கங்கா, சேபெட் 2 பயிரிடலாம்.

7. பாக்டீரியா தண்டழுகல் நோய் - எர்வீன்ா கிரைசேன்திமி பிவி சியே

- இந்நோய் ஹிமாச்சல பிரதேசம், சிக்கிம், மேற்கு வங்காளம், பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான், டெல்லி, உத்திரப்பிரதேசம், பீகார், மத்தியப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய இடங்களில் பரவியுள்ளது.
- தரைப்பகுதியில் தண்டின் பகுதி அழுகியும், பழுப்பு நிறமாக மாறியும் எளிதில் உடையக்கூடியதாகவும் காணப்படும்.
- அழுகியுள்ள திசுக்களின் பகுதி துர்நாற்றத்தை ஏற்படுத்துகிறது.
- பாதிக்கப்பட்ட செடி அடர்ந்த நிறமுடையதாகவும் தண்டின் கீழ் பகுதியில் கருகியும் காணப்படும். ஆண்டு பூத்து முடிந்ததும் செடிகள் விரைவாக இறந்துவிடும்.
- இந்த பாக்டீரியா சேதமடைந்து துர்நாற்றத்தை ஏற்படுத்துகிறது.

கட்டுப்பாடு

- பிளீச்சிங் பவுடரில் 33 சதவிகிதம் குளோரின் உள்ளது, இதை 10 கிலோ / எக்டர் என்ற அளவில் மண்ணில் தெளிக்கவும். இதைப் பூப்பதற்கு முன் தெளிக்கவும்.

- செடிகளை பார்கிளல் நடவும். வயலில் தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்கவும். நன்றாக தண்ணீர் வடியவிடவேண்டும்.

ப்யூசேரியம் தண்டழுகல்  - ப்யூசேரியம் மொனிலிபார்மி

- இந்நோய் வறண்ட பகுதிகளிலும், வெப்பமான பகுதியிலும் காணப்படுகிறது.

அறிகுறிகள்

- இந்நோயினால் பாதிக்கப்பட்ட செடி வாடியும், இலைகள் இளம்பச்சை முதல் வெளிர் பச்சை நிறமுடையதாகவும், கீழ்த்தண்டுப்பகுதி வெளிர் நிறமுடையதாகவும் காணப்படுகிறது.
- தண்டின் உள்பகுதியில் உள்ள திசு சேதமடைகிறது. வாஸ்குலார் திசுவை தவிர மற்ற தண்டின் உள்பகுதியில் சிவப்பு நிறத் தோற்றத்துடன் காணப்படுகிறது.
- இந்நோயை உண்டாக்கக்கூடிய பூசணம் வேரின் வழியாக நுழைந்து தண்டின் கீழ்பகுதியில் வளர்கிறது.
- பூத்தபின் நோய் தாக்கினால், உமியின் மேல்புறம் நிறமற்றதாகவும், வெளிர் நிற தோற்றத்தை உடையதாகவும் காணப்படுகிறது.

கட்டுப்பாடு

- பொட்டா◌ாசியம் வகையினாலான உரத்தை பயன்படுத்துவதால் சேதாரம் குறைகிறது.
- பாதிக்கப்பட்ட இடத்திலிருந்து பெறும் விதைகளை பயிரிடக்கூடாது.
- பயிர் சுழற்சி செய்யவேண்டும்.
- நோய் எதிர்ப்புத்திறன் கொண்ட இரகங்களான - இரன்ஜித் மற்றும் கங்கா 5 பயிரிடலாம்.
- ஒரு முறை கலப்பு செய்யப்பட்ட இரகங்களான - சிம் 103 x சிஎம் 104, சிஎம் 400 x சிம் 300 ஐ பயிரிடலாம்.